**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 487/2023 |
| நாள் | 09.03.2026 |
| வா.சா.2 | சதீஸ்குமார் |
| வயது | 53 |
| ஊர் | நன்னியூர்புதுர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை</u>

நான் என்.புதூரில் குடியிருந்து வருகிறேன். என்னுடைய ஆதார் அட்டையில் உள்ள முகவரியில் தான் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வரவில்லை என்றால், சரிதான். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நான்தான் கூறினேன். பிரதிவாதி, சந்திரனை எனக்கு தெரியும். அவர் பால் வியாபாரம் செய்து வருகிறார். வாதி மகாலிங்கம் என்பவரை எனக்கு தெரியாது. நான் எதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், பிரதிவாதி சந்திரன் கடன் வாங்கியது குறித்து சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பிரதிவாதி, சந்திரன் மகாலிங்கம் என்பவரிடம் கடன் வாங்கினார். பிரதிவாதி ரூ. 6,00,000/–ஐ கடனாக வாங்கினார். பிரதிவாதி கடந்த 08.01.2022ம் தேதியன்று மகாலிங்கத்திடம் கடன் வாங்கினார். மகாலிங்கம் வீட்டில் வைத்து தான் கடன் வாங்கினார். மகாலிங்கத்தின் வீடானது கரூர், சென்னைசில்க்ஸ் பின்புறம் உள்ள பிரேம் ஆலயா அடுக்குமாடி குடியிருப்பில் வைத்து பிரதிவாதி கடன் வாங்கினார். மேற்படி பிரேம் ஆலயா அடுக்குமாடி குடியிருப்பு எத்தனை மாடிகள் கொண்டது என்றால், எனக்கு தெரியாது. மகாலிங்கம் இரண்டாவது மாடியில் குடியிருந்து வருகிறார். இரண்டாவது மாடியில் எத்தனை வீடுகள் உள்ளது என்று எனக்கு

தெரியாது. வாதி மகாலிங்கம் எந்த வீட்டு எண்ணில் குடியிருந்து வருகிறார் என்று எனக்கு தெரியுமா என்றால், தெரியாது. பிரதிவாதிக்கு, வாதி ரூ. 2000 நோட்டுகளாக கடன் கொடுத்தாரா என்றால், இல்லை. ரூ. 500 நோட்டுக்களாக கடன் கொடுத்தார். பிரதிவாதி, சந்திரன் தான் என்னை அழைத்து சென்றார். காலை 8.15 மணி அளவில் கரூர், சென்னை சில்க்ஸ் அருகில் வந்து அழைத்து சென்றார். என்னுடன் ராமசுப்பிரமணியன் என்பவரும் உடனிருந்தார். அவர் எந்த ஊரை சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. ராமசுப்பிரமணியன் என்பவரையும் பிரதிவாதி சந்திரன் தான் அழைத்து வந்தார். நாங்கள் மூவரும் ஒன்றாகத்தான் வாதி மகாலிங்கம் வீட்டிற்கு சென்றோம். இரு சக்கர வாகனத்தில் தான் சென்றோம். ராமசுப்பிரமணியன் என்பவரும் காலை 8.15 மணிக்கு வந்துவிட்டார். நாங்கள் சென்றபோது மகாலிங்கம் வீட்டில் அவர் மட்டும் தான் இருந்தார். பிரதிவாதி சந்திரன் குடும்ப செலவிற்காக கடன வாங்குவதாக கூறினார். பிரதிவாதி கடன் வாங்கிய தேதிக்கு முந்தைய நாளே என்னை நேரில் வந்து அழைத்தார். பிரதிவாதி சந்திரன் வையாபுரி நகரில் குடியிருந்து வருகிறார். நான் அவர் வீட்டிற்கு சென்றுள்ளேன். வையாபுரிநகரில் 2வது குறுக்க தெருவில் வசித்து வருகீறார். பிரதிவாதியின் வீடு எந்த திசையை பார்த்து அமைந்துள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா கடனுறுதிச்சீட்டை யார் வாங்கி வந்தார் என்றால், கடனுறுதிச்சீட்டையும், முத்திரைகட்டணத்தையும் பிரதிவாதி தான் வாங்கி வந்தார். தாவா கடனுறுதிச்சீட்டு காலை 8.30 மணிக்கு எழுதப்பட்டது. தாவா கடனுறுதிச்சீட்டில் பூர்த்த செய்வதற்கு உண்டான சங்கதிகளை பிரதிவாதிதான் குறிப்பிட்டார். ராமசுப்பிரமணியன் என்பவர் தான் தாவா கடனுறுதிச்சீட்டை எழுதினார். தாவா கடனுறுதிச்சீட்டை நேரடியாகவே ராமசுப்பிரமணியன் எழுதினார். தாவா கடனுறுதிச்சீட்டில் பிரதிவாதி சந்திரன் 2 கையொப்பம் செய்தார். தாவா கடனுறுதிச்சீட்டு நீல நிற மையினால் எழுதப்பட்டது. தாவா கடனுறுதிச்சீட்டு லெட் பேனாவால் எழுதபபட்டது. பிரதிவாதி, சந்திரன் லெட் பேனாவால் தான் கையொப்பம் செய்தார். அந்த பேனா நீல நிற மை கொண்டதாகும். நானும், நீல நிற லெட் பேனாவால் கையொப்பம்

செய்தேன். ராமசுப்பிரமணியன் அவர் கொண்டு வந்த போனவால் கையொப்பம் செய்தார். தாவா கடனுறுதிச்சீட்டை எழுதிய பின்பு, படித்துபார்த்தவுடன் வாதி கடன் தொகையை பிரதிவாதிக்கு கொடுத்தார். பிரதிவாதி கடனுறுதிச்சீட்டில் கையொப்பம் செய்ததை நாங்கள் மூவரும் பார்த்தோம். பிரதிவாதி சந்திரன் வேறு தொழில் செய்கிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதி மகாலிங்கத்தை அதன்பின்னிட்டு கோவிலில் பார்த்தேன். வாதி மகாலிங்கத்தின் சொந்த ஊர் கரூராகும். நானும், ராமசுப்பிரமணியம், வாதி மகாலிங்கம்ஆகியோர் கூட்டுசேர்ந்து தாவா கடனுறுதிச்சீட்டை தயார் செய்து அசல் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால், சரியல்ல. பிரதிவாதி கடன் எதுவும் பெறவில்லை என்றும், தாவா கடனுறுதிச்சீட்டை மறுபயனுக்காக எழுதி கொடுக்கவில்லை என்றால், சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது. மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.